# வளர்ந்திடு, வாழ்ந்திடு

Pr. K.Joseph

உயிருள்ளவைகள் அனைத்தும் வளருகிறதாக இருக்கும். ''வளர்ச்சி'' இல்லையென்றால் 'உயிரில்லை' என்று அர்த்தமாகும். ஒரு செடியோ, மரமோ, விலங்கினமோ, பறவையோ எதுவாக இருந்தாலும் வளர்ச்சியை வெளிப்படுத்துகிறதை நாம் பார்க்கிறோம். உயிரே இல்லாததும், உயிராக இருந்து மரித்துப்போனதும் வளர்ச்சியை வெளிப்படுத்த மாட்டாது.

எபேசியர்–4: 14–16 *நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம்* ***வளருகிறவர்களாயிருக்கும்படியாக*** *அப்படிச் செய்தார். அவராலே சரீரம் முழுவதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத்தக்கதாய்க் கிரியைசெய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச்* ***சீரவளர்ச்சியை*** *உண்டாக்குகிறது.*

கிறிஸ்தவ வாழ்வு உயிருள்ளதாக இருக்கிறதா என்பதை அறிந்திட வளர்ச்சி முக்கிய அடையாளமாக இருக்கிறது. அநேகர் அனலற்றவர்களாகவும் மந்தமானவர்களாகவும், உணர்வற்றவர்களாகவும் இருப்பது, எதைக் காட்டுகிறது? நம்முடைய வாழ்வு எந்தநிலையில் இருக்கிறது என்பதை அறிந்துகொண்டு உயிருள்ள கிறிஸ்தவர்களாக நாம் எழும்பிட தேவன் நமக்கு உதவி செய்வாராக!

**வளர்ச்சி என்பது** நம்முடைய வாழ்வில் மாற்றத்தை உண்டாக்குகிறது, **வாழ்க்கை என்பது** பிறருடைய வாழ்வில் மாற்றத்தை உண்டாக்கப் பயன்படுகிறது. கிறிஸ்தவ வாழ்வு வளருகிறதாகவும் வாழ்கிறதாகவும் இருக்க வேண்டும்.

**வளர்ச்சியின் பகுதிகள்:**

1. சரீரத்தில் வளர்ச்சி: (வயதுக்கேற்றவாறு சரீரத் தோற்றத்திலும் பெலத்திலும் வளருதல்)
2. மனதில் வளர்ச்சி: (அறிவில் பெருகுதல்)
3. ஆவியில் வளர்ச்சி ( உள்ளான மனிதனில் வல்லமையாகப் பெலப்படுதல்)

**வாழ்க்கை:** கிறிஸ்துவுக்குள் வருவதற்கு முன் அதாவது இரட்சிக்கப்படுவதற்கு முன் நம்முடைய வாழ்வு இருந்ததற்கும், கிறிஸ்துவுக்குள் வந்த பிறகு அதாவது இரட்சிக்கப்பட்ட பிறகுநம்முடைய வாழ்க்கை இருப்பதற்கும் வித்தியாசத்தை வெளிப்படுத்த வேண்டும்.
எபே–2: 2 *அவைகளில் நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள்.*
எபே–4: 22,24 *அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, … மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்.*

நம்முடைய வாழ்க்கை நற்சாட்சியுள்ள வாழ்க்கையாக இருக்க வேண்டும். வளருவதற்கும் வாழ்வதற்கும் தேவனுடைய உதவியும் பிறருடைய உதவியும் நமக்குத் தேவைப்படுகிறது. தேவனுடைய உதவியை பரிசுத்த ஆவியானவர் மூலமாக சத்தியத்திலிருந்து பெற்றுக்கொள்கிறோம். பிறருடைய உதவியில் இரண்டு நிலைகளை நாம் பார்க்கவிருக்கிறோம்.

**வளருவதற்கு எப்படிப்பட்டவர்கள் தேவை?**
நாம் வளர வேண்டிய பகுதிகளின் அடிப்படையில் நம்மைவிட வளர்ந்தவர்களை நாம் தெரிந்தெடுத்து அவர்களை நமக்கு முன்மாதிரிகளாகப் பயன்படுத்துவோமாக. அப்படிப்பட்டவர்களோடு அதிக நேரம் செலவழிப்போமாக? நம்மைவிட வளர்ந்தவர்களோடு நமக்கு ஐக்கியம் பெருகும்போது அவர்களைப் பார்த்துப் பார்த்து நாமும் வளருவதற்கு அது உதவி செய்திடும்.

நம்முடைய ஜெப வாழ்வு
நம்முடைய வேதாகம அறிவு வாழ்வு
நம்முடைய ஊழிய வாழ்வு
நம்முடைய விசுவாச வாழ்வு
நம்முடைய பரிசுத்த வாழ்வு
நம்முடைய கொடுத்தல், தாழ்மை, தியாகம், அர்ப்பணம்

**சில உதாரணங்கள்:**
இயேசு கிறிஸ்துவின் ஜெபவாழ்வு
தாவீதின் துதி வாழ்வு
பவுலின் ஊழிய வாழ்வு
ஆபிரகாமின் விசுவாச வாழ்வு
தானியேலின் தீர்மான வாழ்வு
யோசேப்பின் பரிசுத்த வாழ்வு
எஸ்றாவின் வேதாகம அறிவு வாழ்வு

**வாழ்வதற்கு எப்படிப்பட்டவர்கள் தேவை:**
தாழ்மையுள்ளவர்களாக வாழ்ந்திட
இரக்கமுள்ளவர்களாக வாழ்ந்திட
மனதுருக்கமுள்ளவர்களாக வாழ்ந்திட
உதவிசெய்பவர்களாக வாழ்ந்திட
மன்னிப்பவர்களாக வாழ்ந்திட
விட்டுக்கொடுப்பவர்களாக வாழ்ந்திட
பிறர்நலமுள்ளவர்களாக வாழ்ந்திட

பிலிப்பியர்–2: 5,4,6–8 *கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது, அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.*

இல்லாதவர்கள், காயப்பட்டவர்கள், கஷ்டப்படுபவர்கள், தள்ளப்பட்டவர்கள், நொறுக்கப்பட்டவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள், கைவிடப்பட்டவர்கள், ஆதரவற்றவர்கள், வேதனையில் வாடுபவர்கள். நம்மைவிட கீழ்மட்டத்திலிருப்பவர்கள் இப்படி ஏராளமான மக்கள் உலகில் வாழ்கிறார்கள். அப்படிப்பட்டவர்களைப் பார்ப்பது கிறிஸ்துவின் சுபவாத்தையும், ஆவியின் கனிகொடுக்கும் வாழ்க்கையையும் உடையவர்களாக நாம் வாழ்ந்திட நமக்குத் துணை செய்யும்.